

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மார்ச் 16, 2017 | புரட்சி 16 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00


## ஒரே மேடையில் நூறுக்கும் அதிகமான கலைஞர்கள் !

# ‘மகுடம்’ இசை முழக்கம் அதிர்ந்தது அரங்கம்






தலைநகர் சென்னையில் நடந்த ‘மகுடம்’ தமிழர் வல்லிசை மண்ணின் இசைக் கருவிகள் மார்தட்டி அணி வகுக்கும் எழுச்சி இசை முழக்கமாய் கடந்த மார்ச் 12ஆம் தேதி ஞாயிறு மாலை காமராசர் அரங்கில் ஒலித்தது. தமிழ்நாட்டில் தமிழர் இசையில் மிளிர்ந்த எத்தனையோ தாளக் கருவிகளும் இசைக் கருவிகளும் காணாமலே போய் விட்டன. இந்த இசைக் கலைஞர்கள் ஒடுக்கப்பட்ட ஜாதியில் பிறந்தவர்கள் என்பதற்காக ஜாதிய சமூகம் அவர்களை ஒதுக்கியதுபோலவே தமிழர்களின் அடையாளங்களைப் பேணிய இசைக் கருவிகளையும் அழித்துவிட்டது. அழிந்து வரும் தமிழர் வல்லிசையை மீட்டெடுத்து, அந்தக் கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்களை ஒரே மேடையில் இசைக்க வைக்கும் கடும் முயற்சியில் இறங்கியது ‘மகுடம்’ அமைப்பு. தலைநகரில் தந்தை பெரியார் தமிழிசை மன்றம் தொடங்கி தமிழிசை விழாக்களை ‘ஆனா ரூனா’ என்று அன்புடன் அழைக்கப்படும் மாணவர் நகலக நிறுவனர் மறைந்த நா. அருணாசலம் நடத்தி வந்தார். அவரது நினைவு நாள் நிகழ்வில் அந்தப் பணி தொய்வின்றி தொடரும் என்று அவரது மகன் மாணவர் நகலக உரிமையாளர் சா.அ.சௌரிராசன் அறிவித்தார்.

அறிவிப்பை செயல்படுத்த தமிழிசை விழாவை மக்கள் இசை விழாவாகத் திட்டமிட்டு 3 மாத காலம் தனது நண்பர்கள் குழாமுடன் தீவிர முயற்சிகளில் இறங்கினார். ஓ. சுந்தரம், கலைவாணன் உள்ளிட்ட நட்புக் குழாம் உடன் நின்றது. தமிழகம் முழுதும் பல்வேறு கிராமங்களில் அடையாளமும் அங்கீகாரமும் மறுக்கப்பட்ட கலைஞர்கள் கண்டறியப்பட்டனர். அவர்கள் அனைவரையும் ஒரே அரங்கில் ஒன்று கூட்டி பல நாட்கள் ஒத்திகைகள் பயிற்சிகள் தரப்பட்டன. ஒவ்வொரு கலைஞரிடமும் புதைந்து கிடந்த ஆற்றல் அனைவரையும் திகைக்க வைத்தது. சுமார் 60 தாள வாத்தியக் கருவிகள் கண்டறியப் பட்டன. இந்தக் கருவிகளை இசைப்போர் வெகு சிலர். சில வகைக் கருவிகளை இசைக்கக் கூடியவர் ஒரே ஒருவராக மட்டுமே இருந்தனர். அத்தனை கலைஞர்களையும் இசையால் இணைய வைத்து அவர்களின் கலை அடையாளங்களுக்கு சுயமரியாதையை சூட்டியது ‘மகுடம்’.

காமராசர் அரங்கம், உணர்வுகளின் சங்கமாய் தமிழர் எழுச்சியாய் தகித்தது. 6.30 மணிக்கு தொடங்கிய நிகழ்வு 9 மணி வரை அரங்கையே அதிர வைத்தது. குடும்பம் குடும்பமாய் திரண்ட தோழர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர், நடனமாடினர். கவிஞர் அறிவுமதியின் உணர்ச்சியூட்டும் பாடலுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. இறுதிக் காட்சியில் 110 கலைஞர்களும் ஒரே மேடையில் இணைந்து நாயன இசையுடன் எழுப்பிய இசையும் தாளமும் ஏற்படுத்திய உணர்வுகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. நடிகர் நாசர் நிகழ்ச்சி பற்றி குறிப்பிடும்போது, “என் வாழ்க்கையில் இது போன்ற அர்த்தமுள்ள ஓர் இசை நிகழ்வை இதுவரை நான் கண்டதே இல்லை” என்றார்.

கவிஞர் அறிவுமதி, ஓவியர் டிராட்ஸ்கி மருது, வீர சந்தானம், நடிகர் நாசர், நடிகர் திலகத்தின் மகன் இராம்குமார், கலைப்புலி தாணு உள்ளிட்ட பல கலைஞர்களும், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் அன்புமணி இராமதாசு, வேல் முருகன் உள்ளிட்ட ஏராளமான அரசியல் கட்சிப் பிரமுகர்களும், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி பூங்குன்றன் உள்ளிட்ட ஏராளமான இயக்கங் களைச் சார்ந்தவர்களும், பேராசிரியர் சரசுவதி, காஞ்சி மக்கள் மன்றம் மகேசு, குட்டி ரேவதி உள்ளிட்ட பெண்ணிய போராளிகளும், பெண்களும் ஆண்களுமாய் அரங்கம் நிரம்பி வழிந்தது. நிகழ்த்துக் கலைஞர்கள், பெருமையிலும் உற்சாகப் பூரிப்பிலும் திளைத்தனர். மக்கள் ஆரவாரமும், கை தட்டலும், ஆட்டமும் சூடேறிக் கொண்டே இருந்தன. கவிஞர் காளமேகத்தின் நரம்பை முறுக்கேற்றும் பாடல் வரிகளோடு நிகழ்வு நிறைவானது. அனைவருக்கும் பாராட்டும் மரியாதையும் செய்யப் பட்டன. கலைஞர்கள், உழைத்தவர்கள், உதவியவர்கள் என அனைவரும் பாராட்டப்பட்டனர்.

பார்ப்பனிய மேட்டுக்குடி மக்களின் – தியாகராஜ கீர்த்தனைகளும், நாமவாளிகளும், தெலுங்கு சமஸ்கிருதப் பாடல்களுமே தமிழ்நாட்டின் இசை என்ற பொய்மையை தகர்த்து, பறை, மகுடம், உறுமி நய்யாண்டி மேளம், நாயனம் போன்ற கருவிகளுடன் களத்துக்கு வந்துவிட்டது தமிழிசை முழக்கம்!

## “இதுவே தமிழர் இசை; இதை உலகுக்கு கூறுவோம்!”

*‘மகுடம்’ விழாவின் தொடக்க உரையாக நிறுவனர் சா.அ. சௌரிராசன் நிகழ்த்திய உரை.*

*தமிழ் இசை மேம்பட வேண்டுமென்று பாடுபட்ட அய்யா நா.அருணாசலம் (ஆனா ரூனா) அவர்கள் தடத்தில்....*



*நமது தமிழ் மொழி உருவான காலத்திலேயே தாய் இசைக் கருவியான பறையும் உருவாகியது என்ற நெடிய தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது நமது தமிழரிசை. நமது கருவிகள் பல்வேறு காலங்களில் வளர்ச்சி பெற்று செய்திகளை அறிவிக்க, போருக்கு உண்டான உணர்ச்சியை உருவாக்க, நீண்ட தூர பயணத்திற்கேற்ப, ஏர் ஓட்ட, ஏற்றம் இறைக்க போன்ற அனைத்து தொழில்களுக்கும் உண்டான இசைக் கோர்வைகளை கொண்டது நமது இசை.*

*நம் தமிழர் வழிபடும் தெய்வங்களும் ஏதோ ஓர் இசைக் கருவியை வைத்திருப்பதாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது அல்லது இந்த தெய்வத்திற்கு இந்தக் கருவிதான் ஏற்றது என்றும் வைத்துள்ளனர். கோயில் திருவிழாக்கள், குடும்ப விழாக்களுக்கு என்று ஒவ்வொரு வகையான ஒலிக் கோர்வையையும் கொண்டு, ஓசையைக் கேட்கும்போதே அங்கே என்ன நிகழ்வு நிகழ்கிறது என்ற செய்தியையும், இசையால், அதற்கான உணர்வையும் தந்தது நமது மூத்த தமிழ் இசை.*

*மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நமது இசை மரபு கலைஞர்களை பெருமைப்படுத்தியதாகும். நமது கலைஞர்கள் மக்களோடு வாழ்ந்து மதிப்புக்குரியவர்களாக திகழ்ந்தனர். அரசர்களின் உற்ற தோழர்களாக விளங்கினர். தலைவனுக்கும், தலைவிக்கும் பிணக்குகள் ஏற்படும்போது அவற்றைப்*


*(4ஆம் பக்கம்)*

# டெல்லி நேரு பல்கலையின் தமிழக தலித் மாணவர் உயிர்ப் பலியானார்!

பா.ஜ.க.வின் ஆட்சி டெல்லியில் பல்கலை வளாகங்களில் பார்ப்பன ‘இந்துத்துவா’வை திணித்து வருகிறது. ‘இந்துத்துவா’வை ஏற்க மறுக்கும் மதச் சார்பின்மை சமூகநீதி கருத்துடைய மாணவர்களின் கருத்துரிமைகளை மறுத்து அவர்கள் மீது வன்முறை தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் அகில பாரதிய வித்தியார்த்தி பரிஷத் மதவெறி கொள்கைகளை எதிர்த்ததற்காக பழி வாங்கப்பட்ட ரோகித் வெமுலா என்ற தலித் ஆராய்ச்சி மாணவர் தற்கொலை செய்து கொண்டார். டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மரண தண்டனைக்கு எதிராக கருத்து தெரிவித்து, அப்சல்குரு முறைகேடாக தூக்கிலிடப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் அவரது நினைவு நாள் நிகழ்வை நடத்திய கன்யாகுமார் உள்ளிட்ட 5 மாணவர்கள் தேச பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தேச விரோதிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர்.


இப்போது அதே ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் ‘பிஎச்.டி.’ ஆய்வு நடத்தும் சேலத்தைச் சார்ந்த தமிழ்நாட்டு மாணவர் முத்துகிருட்டிணன், பார்ப்பன இந்துத்துவ அடக்குமுறையால் மன உளைச்சலுக்கு உள்ளாகி மடிந்துள்ளார். இது தற்கொலையாக இருக்க முடியாது என்று அவரது பெற்றோர் சந்தேகத்தை எழுப்பியுள்ளனர்.

ரோகித் வெமுலாவுக்கு நீதி கேட்டு நடத்தும் சமூகநீதி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றவர் முத்துகிருட்டிணன். வேறு எந்த மாணவர் அமைப்பிலும் அவர் சேரவில்லை. கடந்த 2016, ஜன.17ஆம் தேதி ரோகித் வெமுலாவின் தாயாருக்கு தனது முகநூல் வழியாக எழுதிய கடிதத்தில், “நாங்கள் மாட்டுக்கறி சாப்பிடுகிறவர்கள்; நாங்கள் கடவுள்-மத நம்பிக்கை இல்லாத பகுத்தறிவாளர்கள்; ஆக்கபூர்வமான வளர்ச்சிக்காக சுயமாக சிந்திப்பவர்கள்; அதற்காகவே எங்களுக்கு தேச விரோதிகள் என்ற பட்டத்தை சூட்டுகிறார்கள்” என்று எழுதினார்.

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சேருவதற்காக தான் எவ்வளவு அவமானங்களை சந்திக்க வேண்டியிருந்தது என்பதை உருக்கமுடன் தனது முகநூலில் பதிவு செய்துள்ளார்.

“நான் ‘ஜே.என்.யூ.’க்கு வருவது இது நான்காவது முறை. 3 முறை இதே பல்கலைக்கழகத்துக்கு எம்.ஏ. நுழைவுத் தேர்வு எழுத வந்தேன். 2 முறை நேர்முகத் தேர்வை சந்தித்தேன். முதல் இரண்டு முறை வந்த போது நான் ஆங்கிலத்தை முறையாகப் பேசவில்லை; ஆனாலும் நான் முயற்சியை விடவில்லை. ஒவ்வொரு முறையும் டெல்லிக்குப் போவதற்கு பணம் வேண்டும் என்பதற்காக கூலி வேலை செய்தேன். சில நண்பர்களிடமும் பண உதவி கேட்டேன். இரயில் பயணத்தில் உணவுக்குக்கூட செலவு செய்ய முடியாமல் பட்டினியாகவே பயணிப்பேன். ஆனாலும் நான் முயற்சியை தளரவிடவில்லை. ஒவ்வொரு முறையும் நான் அந்த வளாகத்துக்குள் செல்லும்போது அங்கே உள்ள நேரு சிலையின் கீழே அமர்ந்து அந்த சிலையிடம் பேசுவேன். “நேருஜி, நான் காங்கிரஸ் குடும்பத்திலிருந்து வந்தவன். உங்களுக்கு ஒவ்வொரு தேர்தலிலும் குடும்பமாக வாக்களிக்கிறோம். ஏன், எனக்கு கல்வி தர மறுக்கிறீர்கள் ? நேருஜி, உங்களை மன்றாடி கேட்கிறேன்” என்று அந்த சிலையிடம் கெஞ்சுவேன்.

கடைசியாக நான் நேர்முகப் பேட்டிக்கு சென்ற போது 11 நிமிடம் என்னிடம் கேள்வி கேட்டார்கள். அப்போது, ‘நீ பேசுவது சாதாரணமான ஆங்கிலம்’ என்று, ஒரு ‘மேடம்’ கூறினார். இந்த ஆண்டு 8 நிமிடம் என்னிடம் கேள்வி கேட்டார்கள். எல்லா கேள்விக்கும் நன்றாகவே பதில் அளித்தேன். மூன்று பேராசிரியர்கள், “நீ நன்றாக ஆங்கிலம் பேசுகிறாய்” என்று பாராட்டினார்கள். அரசு கல்லூரியில் படித்து விட்டு மத்திய பல்கலையில் நுழைந்த ஒரே மாணவன் நான்தான். சேலம் மாவட்டத்திலிருந்து ‘ஜே.என்.யூ.’வில் படிக்க வந்த முதல் மாணவனும் நான்தான். எப்படியோ தேர்வு செய்யப்பட்டேன். என்னுடைய கண்காணிப்பு பேராசிரியர் பி. ஈஸ்வர் பொனோவுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அவர் எனக்குள் ஆராய்ச்சிக்கான உந்துதல் இருப்பதை உணர்ந்தார். எனக்கு ஊக்கம் தந்தார். ஆராய்ச்சிக்கான கருது கோள்களை என்னையே தயாரிக்கச் சொன்னார். 38 முறை மீண்டும் மீண்டும் எழுதினேன். நான் நன்றி சொல்ல வேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். இது



எனக்கு ஒரு வரலாற்றுத் தருணம். ‘ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தை நோக்கிய எனது பயணம்’ என்ற நூலை எழுதவிருக்கிறேன் - என்று ஆங்கிலத்தில் எழுதி, கடைசியாக ‘மகிழ்ச்சி’ - என்ற தமிழ்ச் சொல்லோடு முடித்திருந்தார்.

“எம்.ஃபில் - பிஎச்.டி. தேர்வுக்கு இந்த பல்கலையில் சமமான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. நேர்முகத் தேர்விலும் சமத்துவம் இல்லை. சமத்துவம் - சமஉரிமை மறுக்கப்படும்போது அனைத்துமே மறுக்கப்படு கின்றன” என்று தனது இறுதி பதிவில் குறிப்பிட் டிருக்கிறார்.

டெல்லியில் முனிர்க்கா கார் பகுதியில் உள்ள நண்பர் வீட்டுக்கு உணவுக்கு வந்தார். உணவுக்குப் பிறகு உறங்கச் செல்வதாகக் கூறி அறைக்குச் சென்றார். அங்கே தூக்கிலிட்டுக் கொண்டதாக கூறுகிறார்கள். கதவைத் திறக்காத நிலையில் நண்பர் காவல்துறைக்கு தகவல் தந்ததாகவும், காவல்துறை அதிகாரி கதவை உடைத்து பார்த்தபோது தூக்கில் தொங்கியதாகவும் காவல்துறை தரப்பில் கூறப்படு கிறது.

அவரது தந்தை ஜீவானந்தம், சேலத்தில் தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்க்கிறார். “எனது மகன் கோழையல்ல; போராளி. அவன் இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கவே மாட்டான். இதில் ஏதோ சதி நடந்திருக்கிறது. விசாரணை நடத்த வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்.

சேலம் அரசு கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்து கோவை தனியார் கல்லூரியில் ‘பி.எட்.’ முடித்து அய்தராபாத் பல்கலையில் ‘எம்.ஃபில்’ முடித்து கடந்த ஆண்டு ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ‘பிஎச்.டி.’ ஆய்வு மாணவராக சேர்ந்தவர் முத்து கிருட்டிணன்.

# திருப்பூரில் ஜாதி, சடங்கு மறுப்புத் திருமணம்

20.02.2017 அன்று காலை திருப்பூர் அம்மாபாளையம்,பெரியார் படிப்பகத்தில் கவிஜயலட்சுமி-சவீரகுமார் ஆகியோரின் ஜாதி மறுப்பு, சடங்கு மறுப்புத் திருமணம் திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட கழகத் தலைவர் முகில்ராசு தலைமையில் நடை பெற்றது.



இத்திருமணத்திற்கு அதிமுக பகுதி செயலாளர் இரா.கோபிநாதன், கழகத் தோழர் நகுலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்தத்தை இணை யர்கள் கழகத் தோழர்கள் முன்னிலையில் உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டனர்.

குட்டி பிரசாந்த், மாநகர தலைவர் தனபால், அமைப்பாளர் முத்து, ஜெயா, நசீர், பாலு சந்தர் கணேசன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# பொய் வழக்கிலிருந்து கழகத் தோழர்கள் விடுதலை !



திருப்பூர் மாஸ்கோ நகர் பல்வேறு தரப்பட்ட உழைக்கும் மக்கள், சிறுபான்மையின மக்கள் வசிக்கும் பகுதியாகும். இப்பகுதி மக்களை குற்றப்பரம்பரையினர் போல் பாவிக்கும் திருப்பூர் மாவட்ட காவல்துறை, நடவடிக்கை எனும் பெயரில் திடீரென சோதனைகள் செய்வது,பொய் வழக்குகள் போடுவது என தொடர்ச்சியாக பொது மக்களுக்கு தொல்லைகள் கொடுத்து வந்தது.

முதன்முறையாக காவல்துறை போட்ட பொய் வழக்கை நீதிமன்றத்தில் தகர்த்துள்ளது திராவிடர் விடுதலைக்கழகம்.

மாஸ்கோ நகர் பகுதியில் இருந்து கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டு ஜாதிவெறி, மத வெறியர்களுக்கு எதிராக துணிச்சலுடன் களச் செயல்பாடுகளில் இயங்கிவந்த தோழர்கள் மாதவன், நாகராசு ஆகியோர் மீது 2015 ஆம் ஆண்டு காவல்துறை துணையுடன் மத, ஜாதி வெறியர்கள் பொய் வழக்கை பதிவு செய்தார்கள்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் காவல்துறையால் கடுமையாக தாக்கப் பட்டு 26 நாட்கள் சிறையில் அடைத் தார்கள். அப்போது இக் கைதைக் கண்டித்து கழகத்தின் சார்பில் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வழக்கின் தீர்ப்பு 05.03.2017 அன்று வழங்கப் பட்டது.தோழர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்ட தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். தோழர்களுக்கு புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு, மாவட்டச் செயலாளர் நீதி ராசன், மாவட்ட அமைப்பாளர் அகிலன், மாணவர் கழக அமைப்பாளர் அரிஷ்குமார், தெற்கு மாவட்ட அமைப்பாளர் ராமசாமி, திருவள்ளுவர் பேரவை துரை, மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீனவர் படுகொலைக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் கண்டனம்

இலங்கை கடற்படையினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இராமேஸ்வரத்தை சேர்ந்த பிரிட்ஜோ என்ற மீனவர் உயிரிழந்ததோடு ஜெரோன் என்ற மீனவர் காயம் அடைந்தார். இந்த செய்தி தமிழக மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பினை ஏற்படுத்திய அதேநேரம் இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் வாழும் தமிழர்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை உருவாகியுள்ளதோடு இலங்கை நாடாளுமன்றத்திலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கி சூட்டு சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சா.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் இலங்கை நாடாளுமன்றத்திலே கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில், “ஒரு நாட்டின் எல்லையை தாண்டிய குற்றத்துக்காக ஒருவரை படுகொலை செய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி வந்தபோது மீனவர் கடற்படையால் சுடப்பட்டுள்ளார், சர்வதேச கடல் எல்லையை யார் தாண்டி வந்தாலும் அவர்களை கைது செய்ய வேண்டுமே தவிர சுட்டுத் தான் கொல்ல வேண்டும் என்பது பரிகாரம் அல்ல என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் நாடாளுமன்றத்திலே இலங்கை கடற்படையை கடுமையாக சாடியுள்ளார்.

# 119 பேர் மரணமடைந்த குண்டுவெடிப்புகளுக்கு திட்டமிட்டேன்: அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்

இராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் தர்காவில் ரம்சான் தொழுகையில் 5000 இஸ்லாமியர்கள் ஈடுபட்டிருந்த போது குண்டு வெடித்தது. இதில் 3 பேர் இறந்தனர் 17 பேர் படுகாயமடைந்தனர். வழக்கம்போல் இதில் இஸ்லாமியர்களே குற்றவாளி என்று கைது செய்தனர். தீவிர விசாரணைக்குப் பிறகு குண்டு வைத்தது இந்து தீவிரவாதிகள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பது கண்டறியப்பட்டது. தேசிய புலனாய்வு நிறுவனம் இந்த வழக்கை விசாரித்தது. சிறப்பு நீதிமன்றம் வழக்கில் முக்கிய குற்றவாளியான முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.காரர், அசீமானந்தாவை விடுதலை செய்து விட்டு 3 பேரை மட்டும் குற்றவாளி என்று கூறியிருக்கிறது. அசீமானந்தா டெல்லி உயர்நீதி மன்றத்தில் பல தாக்குதல்களை நானே திட்டமிட்டேன் என்று ஒப்புதல் வாக்குமூலமே தந்திருந்தார்.


‘காரவான்’ ஆங்கில இதழுக்காக லீனா கீதா ரெங்கநாத் எனும் செய்தியாளர் தனது குழுவினருடன் அம்பாலா சிறையில் அசீமானந்தாவை பேட்டி கண்டார். 2013ஆம் ஆண்டு நான்கு முறை சந்தித்து, 9 மணி நேரம் 26 நிமிடம் பதிவு செய்தார். தனது பயங்கரவாத செயல்களை வெளிப்படையாக அவர் ஒப்புக் கொண்டதோடு இதற்கு ஆர்.எஸ்.எஸ்.சின் முழு ஆசீர்வாதமும் உண்டு என்று அவர் கூறினார். டெல்லி மாநகர் நீதிமன்றத்திலும் இதேபோல் ஒப்புதல் வாக்குமூலம் தந்த பிறகும் இப்போது டெல்லி சிறப்பு நீதிமன்றம் அவரை நிரபராதி என்றும் அவருக்கு எதிராக போதுமான சாட்சியங்கள் இல்லை என்றும் விடுதலை செய்துவிட்டது. ‘காரவன்’ ஏட்டில் அவரது பேட்டி வெளி வந்தவுடன், வழக்கம்போல் ஆர்.எஸ்.எஸ்.சும், பா.ஜ.க.வும் இவை உண்மைக்கு மாறானவை என மறுத்தன. அதைத் தொடர்ந்து அவரது பேட்டியின் ஒலி நாடா இணையத்தில் ஒலிப்பதிவாக வெளியிடப்பட்டது. இப்போதும் http/www.caravanmagazin.in/swamiassemanda-interviews என்ற தளத்தில் அதை கேட்கலாம்.

நரேந்திர மோடியின் முழுமையான ஆதரவு பெற்றவர் அசீமானந்தா. அவர் இப்போது வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ முழுமையாக வெளியிடுகிறது. அதிர்ச்சியூட்டும் தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

“சுவாமிஜியை வரச் சொல்லுங்க” என்று ஜெயிலர் உத்தரவிட்டார். உடனே அவர் அலுவலகத்திலிருந்து இரு காவலர்கள் விரைந்து சிறை மைதானத்துக்கு சென்றார்கள். சுவருக்கு மறுபக்கம் ஏதோ நூறு பேர் கூச்சலிட்டுக் கொண்டிருப்பது போன்ற ஒலி சுவர்களில் எதிரொலித்தது. அம்பாலா சிறையில் அது பார்வையாளர் நேரம். 2012 ஜனவரி 10.

சில நிமிடங்கள் கழித்து ஜெயிலர் அறை வாசலில் வந்து நின்றார் சுவாமி அசீமானந்தா. சாதாரண மக்கள் மீது பல இடங்களில் பயங்கரவாத தாக்குதல்களை திட்டமிட்டு நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஹிந்துத்துவ கனல் தெறிக்கும் சாமியார். காவி வேட்டியும் முட்டி வரை நீளும் காவி குர்த்தாவும் அணிந்திருந்தார். அப்போதுதான் சலவை செய்து இஸ்திரி போட்ட உடைகளின் தோற்றம். நெற்றி மீது கவிழும் விதத்தில் ஒரு கம்பளி குரங்குக் குல்லாயும், கழுத்தைச் சுற்றி காவி மஃப்ளரும் இருந்தன. என்னைக் கண்டதும் அவருக்கு ஏனோ விநோதமாக இருந்தது. ஒருவருக்கொருவர் நமஸ்தே சொல்லிக் கொண்டோம். அவர் என்னை பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே வெள்ளை வேட்டி குர்த்தா அணிந்த குமாஸ்தாக்கள் பிருமாண்டமான லெட்ஜர்களில் ஆழ்ந்து போயிருந்தார்கள். கதவுக்குப் பின்னால் இருந்த பெரிய மரப் பெட்டியின் மீது அவர் உட்கார்ந்தார். அருகே இருந்த ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு உட்காரும்படி எனக்குச் சொன்னார். அவர் வீட்டுக்கு வந்த விருந்தாளியை உபசரிப்பவர் போல என்னிடம் சகஜமாக இருந்தார். எதற்கு வந்தீர்கள் என்று கேட்டார். “யாராவது ஒருத்தர் உங்கள் கதையைச் சொல்ல வேண்டுமில்லையா?” என்றேன்.

அடுத்த இரு வருடங்களில் அசீமானந்தாவுடன் நான் நடத்திய நான்கு சந்திப்புகளின் ஆரம்பம் அதுதான். (அதற்கு முன்பு டிசம்பர் 2011இல் ஒரு நீதிமன்ற விசாரணையின்போது அவரை சந்தித்திருக் கிறேன்) மொத்தம் 82 பேர் கொல்லப்பட்ட மூன்று வெடிகுண்டு நிகழ்ச்சிகள் தொடர்பாக கொலை, கிரிமினல் சதி, தேசத் துரோகம் ஆகிய குற்றச் சாட்டுகளின் கீழ் அவர் கைதாகி விசாரணை நடந்து கொண்டிருந்தது. இன்னும் இரண்டு வெடிகுண்டு சம்பவங்களிலும்கூட அவரை விசாரிக்கக் கூடும்.



## ஒப்புதல் வாக்கு மூலத்துக்குப் பிறகும் விடுதலையான பயங்கரவாதியின் கதை

குற்றப் பத்திரிகையில் அவர் பெயர் உள்ளது. எனினும் முறைப்படி இன்னும் குற்றம் சாட்டப்படவில்லை. மொத்தமாக ஐந்து வெடிகுண்டு நிகழ்ச்சிகளிலுமாக 119 பேர் கொல்லப்பட்டது இந்திய சமூகத்தின் இணக்கத்தைக் குலைப்பதாக இருந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டால், அசீமானந்தாவுக்கு மரண தண்டனையே கிடைக்கக் கூடும். (ஆனால் இப்போது விடுதலையாகிவிட்டார் – ஆர்)

நாங்கள் பேசப் பேச, அசீமானந்தா மேலும் மேலும் சகஜமாகவும் வெளிப்படையாகவும் பேச ஆரம்பித்தார். அவர் வாழ்க்கை பற்றி அவர் சொன்ன விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை மட்டுமல்ல மனதை தொல்லை செய்பவையும்கூட. தான் வாழ்க்கையில் பின்பற்றிய கொள்கைகள் பற்றியும், தான் செய்த வன்முறை சம்பவங்கள் பற்றியும் அவருக்கு திமிரான ஒரு பெருமிதம் இருந்தது. நாற்பது வருடங்களாக அவர் ஹிந்து தேசியவாதத்தை ஊக்குவித்தவர். அதில் பெரும் காலத்தை அவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பழங்குடியினர் பிரிவான வனவாசி கல்யாண் ஆசிரமத்தில் பணியாற்றுவதில் செலவிட்டு சங்கத்தின் ஹிந்துத்துவ கொள்கையையும் ஹிந்து ராஷ்டிரத் துக்கான பார்வையையும் பரப்பினார். இப்போது அறுபது வயதைக் கடந்துவிட்ட அவர் தன்

> **‘என்னை கோபால் கோட்சே இருந்த அதே கொட்டடியில் வைத்திருக்கிறார்கள்’ என்று பெருமையாக சொல்லிக் கொண்டார் அசீமானந்தா.**

கொள்கைகளை ஒருபோதும் நீர்க்கவிட்டதில்லை.

காந்தியைக் கொன்ற பிறகு கைதான நாதுராம் கோட்சேவும் அவரது கூட்டாளி நாராயண் ஆப்தேவும் 1949இல் தூக்கிலிடப்பட்டு தகனம் செய்யப்பட்டது அம்பாலா சிறையில்தான். இன்னொரு கூட்டாளியான கோட்சேவின் சகோதரர் கோபாலுக்கு 18 வருட சிறை தண்டனை தரப்பட்டது. ‘என்னை கோபால் கோட்சே இருந்த அதே கொட்டடியில் வைத்திருக்கிறார்கள்’ என்று பெருமையாக சொல்லிக் கொண்டார் அசீமானந்தா. இன்று இந்துத்துவ பயங்கரவாதத்தின் மிகப் பிரபலமான முகம் அசீமானந்தாதான். வெடிகுண்டு நிகழ்ச்சிகள் நடப்பதற்கு பல வருடங்கள் முன்னர் அவரை சந்தித்திருந்த பத்திரிகையாளர்கள் எல்லாரும் என்னிடம் அவரை சகிப்புத் தன்மையே இல்லாத மிகவும் திமிரான ஒரு மனிதர் என்று வர்ணித் திருந்தார்கள். நான் இப்போது அந்த சிறையின் இருண்ட அலுவலக அறையில் சந்தித்தது சிறை வாசத்தால் சாதுவாக்கப்பட்ட, அதே சமயம் தன் செயல்கள் பற்றி எந்த வருத்தமும் இல்லாத ஒருவரை. “எனக்கு என்ன நடந்தாலும், அது ஹிந்துக்களுக்கு நல்லதுதான்” என்று சொன்ன அசீமானந்தா அவருக்கு இந்த வழக்கில் கிடைக்கும் எந்த தண்டனையானாலும், அது ‘ஹிந்துக்களை பொங்கி எழச் செய்யும்’ என்று நம்புகிறார்.

2007 பிப்ரவரி 18 இரவு. வழக்கம்போல டெல்லி இரயில் நிலையத்தின் 18ஆவது நடைமேடையிலிருந்து சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் புறப்பட்டது. ‘நட்பு இரயில்’ என்று அழைக்கப்படும் இந்த இரயில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஓடும் இரண்டே இரண்டு இரயில்களில் ஒன்று. அன்று இரவு அதில் பயணம் செய்தோரில் மூன்றில் இரு பங்கினர் தங்கள் நாட்டுக்கு திரும்பச் செல்லும் பாகிஸ்தானிகள். இரயில் புறப்பட்டு ஒரு மணி நேரம் கழித்து நள்ளிரவுக்கு சில நிமிடம் முன்னால், இரண்டு சாதாரண பயணிகள் பெட்டிகளிலும் நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தன. பதினாறு பெட்டி களுடன் நள்ளிரவில் ஓடிக் கொண்டிருந்த அந்த இரயில் நெடுகத் தீ பிடித்து எரிந்தது.

குண்டுகள் வெடித்ததால், பெட்டிகளின் வாசல்பகுதிகள் திறக்க முடியாமல் மூடிக் கொண்டன. பயணிகள் உள்ளேயே சிக்கிக் கொண்டார்கள். ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ நிருபரிடம் ஒரு இரயில்வே டிக்கட் பரிசோதகர் சொன்னார்: “அது பயங்கரமாக இருந்தது. பெட்டி முழுக்க எரிந்த உடல்கள்தான். முழுக்க எரிந்தவை. பாதி எரிந்தவை.” பின்னர் இரு பெட்டிகள் நிறைய அடுக்கி வைக்கப் பட்டிருந்த வெடிக்காத நாட்டு வெடிகுண்டுகள் அதில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த குண்டுகளில் PETN, TNT, RDX, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் என்று பல வித இரசாயனங்கள் அடைக்கப் பட்டிருந்தன. மொத்தம் 68 பேர் உயிரிழந்தனர்.

அசீமானந்தாதான் இதற்குப் பொறுப்பு என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மொத்தம் ஐந்து குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளில் இந்த இரண்டாவது வெடிப்புதான் மிக பயங்கரமானது ஆகும். அவர் சம்ஜௌதா குண்டு வெடிப்பு வழக்கில் முதல் குற்றவாளி. ஹைதராபாத்தில் மெக்கா மசூதி அருகே மே 2007இல் 11 பேர் சாகக் காரணமான குண்டுவெடிப்பு வழக்கில் மூன்றாவது குற்றவாளி. அக்டோபர் 2007இல் இராஜஸ்தான் அஜ்மீரில் மூவர் கொல்லப்பட்ட குண்டு வெடிப்பில் ஆறாவது குற்றவாளி. செப்டம்பர் 2006லும் செப்டம்பர் 2008லும் மகாராஷ்டிரத்தில் மலேகானில் நடந்த இரு தாக்குதல்களில் மொத்தமாக 37 பேர் கொல்லப்பட்ட சம்பவங்கள் பற்றிய வழக்கில் அசீமானந்தாவின் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்குகளை வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு துறையினர் விசாரித்து ஐந்து வழக்குகளில் ஒரு டசனுக்கு மேற்பட்ட குற்றப்பத்திரிகைகள் பதிவாகியுள்ளன. விசாரித்தவர்கள் மும்பை பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு, ராஜஸ்தான் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு, சி.பி.ஐ. தேசிய புலனாய்வு பிரிவு ஆகியோர். மொத்தம் 31 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதில் இருவர் அசீமானந்தாவுக்கு நெருக்கமான கூட்டாளிகள். பாரதிய ஜனதா கட்சியின் மாணவர் பிரிவான அகில பாரதிய வித்யார்த்தி பரீஷத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர் பிரக்யா சிங் தாக்குர், இந்தூர் மாவட்ட முன்னாள் ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுனில் ஜோஷி ஆகியோர் இவர்கள்.

விசாரித்த அத்தனை அமைப்புகளும் இந்த தாக்குதல்களை திட்டமிடுவதில் அசீமானந்தா தான் முக்கிய பங்காற்றியவர் என்று சொல்லியுள்ளன. திட்டமிடும் கூட்டங்கள் நடத்தியது, எங்கே யாரை தாக்க வேண்டும் என்று தேர்வு செய்தது, குண்டு தயாரிப்புக்கு நிதி அளித்தது, குண்டு வைக்கவும் வெடிக்கவும் வேலை செய்தோருக்கு உதவியும் அடைக்கலமும் கொடுத்தது என்று பல வேலைகளைத் தான் செய்ததாக அசீமானந்தாவே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

டிசம்பர் 2010லும் ஜனவரி 2011லும் அசீமானந்தா டெல்லியிலும் ஹரியானாவிலுமாக இரு முறை கொடுத்த சட்டப்பூர்வமான ஒப்புதல் வாக்குமூலங் களில் தான் தாக்குதல்களை திட்டமிட்டதை ஒப்புக் கொண்டிருக்கிறார். இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் தந்தபோது, அசீமானந்தா தனக்கு வழக்கறிஞர் தேவையில்லை என்று மறுத்து விட்டார். ஒவ்வொரு முறை வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்னரும் அவர் விசாரணை அதிகாரிகள் நெருங்க முடியாத பாதுகாப்பில் 48 மணி நேரம் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். சுயமாக சிந்தித்து மனதை மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு அப்போது அவருக்கு இருக்கவே செய்தது. இருமுறையும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட அவர் முடிவு செய்தார். நீதிமன்றத்தில் அதைப் பதிவு செய்தார்.

அவருடைய வாக்குமூலங்களிலும், அவரது இரு கூட்டாளிகளின் வாக்குமூலங்களிலும் இந்த தாக்குதல்கள், ஆர்.எஸ்.எஸ்.சின் மூத்த உறுப்பினர் ஒருவருக்குத் தெரிந்தே இவை திட்டமிடப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**(தொடரும்)**

**நன்றி: ‘நரேந்திர மோடி ஆதரவு பெற்ற ஒரு காவி பயங்கரவாதியின் ஒப்புதல் வாக்கு மூலம்’ நூலிலிருந்து (தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர்கள் ஞாநி, நரேன் ராஜகோபாலன்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இனம் கூடி சேர்ந்து எழுக!

(மகுடம் இசை முழக்கத்தின் நிறைவு காட்சியாக கலைஞர்கள் வல்லிசையோடு குழுவினர் பாடிய எழுச்சிப் பாடல்)

இடிகொண்ட மேகமாய்
இசைதந்த வேகமாய்!
இனம்கூடி சேர்ந்து எழுக
விடிகின்ற பொழுதுக்கு
வென்றநம் வரலாற்றை
விரிவாகச் சொல்லித் தருக!

உயிருக்குள் ஒளியாகி
உணர்வுக்குள் மொழியாகி
உலகாள வந்த தமிழே!
ஒருபோதும் அடங்காது
ஒடுங்காது ஓயாது
உன்னோடு நான்கொண்ட உறவே!
(இடிகொண்ட)

அன்பெங்கள் அறமாக
அறிவெங்கள் வரமாக
அகற்றுவோம் சாதி நோயை!
ஆணுக்கு பெண்சமம்
என்பதே நீதியாய்
ஆக்குவோம் புதியபாதை!
(இடிகொண்ட)

எழில்கொண்ட வரலாறு
இலக்குகள் தெளிவோடு
இலக்கண இலக்கியங்கள்!
இழக்காமல் இன்றைக்கும்
எம்மோடு வளர்கின்ற
இசைக்கலை வாத்தியங்கள்!
(இடிகொண்ட)

அழியாத வாழ்வியல்
அகத்திணை புறத்திணை
அறம்கூறும் நல்ல நூல்கள்!

அவ்வையும் கம்பனும்
திருமூலர் வள்ளுவன்
அடையாளம் தந்த பேர்கள்!
(இடிகொண்ட)

களம்கண்டு நின்றாலும்
கரைதாண்டிச் சென்றாலும்
கரையாத எங்கள் உணர்வு!
கலையாக மொழியாக
காற்றோடு இசையாக
கலந்தேஎம் உயிர்வாழும் உறவு!
(இடிகொண்ட)

கோபங்கள் குறையாமல்
கொடுத்ததை மறக்காமல்
கூடினோம் கடலின் ஓரம்!
குடிகாக்க உயிரினை
கொடையாகத் தருவது
குலங்காக்கும் நமது வீரம்!
(இடிகொண்ட)

இயலாது எனும் பேச்சுக்
கிடமில்லை எனக்கூறும்
இளையோர்கள் சேர்ந்த கூட்டம்!
இசையாலும் தமிழாலும்
ஒன்றாகச் சேருவோம்
உருவாகும் நல்ல மாற்றம்!
(இடிகொண்ட)

**ஆக்கம்: கவிஞர் காளமேகம்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

(முதல் பக்கத் தொடர்ச்சி)

போக்கக்கூடிய மரியாதைக்குரியவர்களாகவும் செயல்பட்டார்கள் என்று சங்க இலக்கியங்கள் நமக்கு உரைக்கின்றன. ஆனால் **இன்று நமது இசையும் நமது கலைஞர்களும் சாதிய அடுக்குகளுக்கிடையே அழுத்தப்பட்டுக் கிடக்கின்றனர். இந்நிலையை மாற்ற முடியுமா? வல்லிசையாக வெளிப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எங்களிடம் எழுந்தது; களத்தில் இறங்கினோம்.**

நமது இசை வடிவங்கள் தமிழ் நாடெங்கும் அந்த நிலப்பரப்புக்கும், வாழ்க்கை சூழலுக்கும் ஏற்ற வகையில் திணைக் கோட்பாடுகளாக பிரிக்கப்பட்டு மூவாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே வகைப்படுத்தப்பட்டு விட்டன. இதன் தொடர்ச்சியான நம் இசை இன்று கன்னியாகுமரிக்கு செண்டை, திருநெல்வேலிக்கு மகுடம், இராமநாதபுரம், விருது நகருக்கு எருதுகட்டு மேளம், மதுரைக்குப் பறை, நையாண்டி மேளம், தஞ்சைக்கு நையாண்டி மேளம், கோவைக்கு துடும்பு, அந்தியூருக்கு பம்பை, திருவண்ணா மலைக்கு பெரிய மேளம், தர்மபுரிக்கு மொடாமத்தளம், புதுவைக்கு வட்டக்கிளியல், சென்னையில் திருக்கைலாய வாத்தியங்கள் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் தத்தம் பகுதிகளில் நுகர்ந்த இசை மட்டுமல்லாமல் மலைவாழ் மக்களிடையே உள்ள இசை வடிவங்கள், கருவிகள் அனைத்தையும் தொகுத்து ஒரே மேடையில் இசைத்தால்? என்ற பெரிய வினாவும், பறையும் செண்டையும் ஒன்று சேருமா? மகுடமும் தவிலும் இணைந்து இசைக்குமா? பெரிய மேளமும் பம்பையும் ஒத்திசையுமா? என்ற பல்வேறு துணை வினாக்களும் எங்கள் முன் நின்றன. அனைத்து கலை வடிவங்களையும் ஒத்திசைக்க முடியுமா? என்ற பெரிய கேள்வியும், அதை ஒட்டிய துணை கேள்விகளுக்கும் உண்டான விடை தான் மகுடம் - தமிழர் வல்லிசை.

உள்ளங்கையில் அடங்கக்கூடிய கருவி, கையளவே உள்ள கருவி, ஒரு பக்கம் இசைக்கக் கூடியது, இரு பக்கமும் இசைக்கக் கூடியது, வெறுங்கையில் தட்டுவது, குச்சி கொண்டு தட்டுவது, மனதை மயக்கும் குழல்கள், மாயக் குழல், உள்ளம் கொள்ளை கொள்ளும் நாயனம், நம்மோடு பேசும் உறுமி, உணர்வை உச்சத்துக்குக் கொண்டு செல்லும் உடுக்கை, வீரத்தை ஊட்டும் 16 அடி நீளம் கொண்ட நெட்டுத்தாரை, ஒரு ஆளின் உயரத்திற்கும் மேற்பட்ட 6 அடிக்கு மேற்பட்ட கிணை முரசு, கோயில்களில் வாசிக்கப்படும் திருக்கைலாய வாத்தியங்கள் என்று தோல் கருவிகள், துளைக் கருவிகள், ஊது கருவிகள், உலோக கருவிகள், இயற்கையான சங்கு என ஐம்பதுக்கும் மேற்பட்ட கருவிகளுடன் அணி வகுக்கும் மாபெரும் நிகழ்வு மகுடம் - தமிழர் வல்லிசை நிகழ்வாகும்.

தமிழர்களின் அனைத்து இசைக் கருவிகளையும் ஒரே மேடையில்... நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள், ஐம்பதிற்கும் மேற்பட்ட கருவிகள் பல்வேறு இசை வடிவங்கள் கொண்டது மகுடம் - தமிழர் வல்லிசை. கலைஞர்கள் தங்களுடைய தனித்தன்மையை வெளிப்படுத்தும் வகையிலும், தனி ஒரு கலைஞனின் இசை வெளிப்பாடு, குழுவின் இசை, அனைத்து குழுக்களையும் கொண்டு நூற்றுக்கணக்கானவர்களாக இணைந்து ஒத்திசையாகவும் வெளிப்படும் தமிழர் வல்லிசையே மகுடம் குழுவின் நிகழ்வு.

நிறைவாக, இதுதான் தமிழர் இசை என்பதை உலகுக்கு அறிவிக்கும் எழுச்சி மிக்க வல்லிசை நிகழ்ச்சியாக இதோ, அரங்கேறுகிறது 'மகுடம்' - தமிழர் வல்லிசை!

# சாதனை மகளிருக்கு கழகம் பாராட்டு விருது



திருச்சி திராவிடர் விடுதலைக் கழக சார்பில் மார்ச் 10ஆம் நாள் உலக மகளிர் நாளும் அன்னை மணியம்மையார் பிறந்த நாள் மற்றும் சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கும் விழாவும் திருச்சி ரவி மினி அரங்கில் சிறப்புடன் நடந்தன. டார்வின்தாசன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் மனோகரன் வரவேற்றுப் பேசினார். விழாவில் வழக்கறிஞர் பானுமதி, பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் மணிமேகலை, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றி சாதனை மகளிருக்கு விருதுகளை வழங்கினர்.

விருது பெற்ற மகளிர் விவரம்:

ச. பெட்ரிசியாமேரி - இவரது கணவர் முடிதிருத்தும் கடை நடத்தி வந்தார். உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்த நிலையில், மேரி துணிவுடன் முடிதிருத்தும் தொழிலில் தானே இறங்கினார். ஆண்கள் குழந்தைகளுக்கான முடிதிருத்தத்தை துணிவுடன் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே நடத்தி வருகிறார்.

க. இராஜேசுவரி : இரசாயனம் இல்லாத மூலிகைப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் இறங்கி விற்பனையும் செய்து வருகிறார்.

சு. லட்சுமி : சொந்தமாக ஆட்டோ வாங்கி, ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறார்.

ஆர். நீலா : நம்மாழ்வாரின் இயற்கை உணவு இயக்கத்தில் ஈடுபட்டு, ஆலங்குடியில் இயற்கை உணவகத்தை நடத்தி வருகிறார்.

தி. இராஜேஸ்வரி : திருச்சி பெல் நிறுவனத்தில் உதிரி பாகங்களை தயாரித்துத் தரும் பணியை ஒப்பந்தத்தில் எடுத்து உதிரி பாகங்களை தயாரித்து சப்ளை செய்து வருகிறார்.

ச. இந்திராணி : இவர் கால் டாக்சி ஓட்டுனராக பணியாற்றுகிறார்.

க. ஜீவராணி : புகைப்படக் கலையை கற்று சொந்தமாக புகைப்படம் எடுக்கும் நிலையத்தை நடத்தி வருகிறார்.

க. வள்ளி : பெண்களுக்கான 'நாப்கின்' தயாரிப்பை மூலிகை வழியாக தயாரித்து விற்பனை செய்து வருகிறார்.

அனைவருக்கும் விருதுகளையும் நூல்களையும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் மணிமேகலை இருவரும் வழங்கினர். கழகத் தோழர் இரா. அழகர் எழுதிய 'அஞ்சலி என்ற அழகி' எனும் சிறுகதை தொகுப்பு நூலை நிகழ்வில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்டு அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு 'பெரியார் இன்றும்-என்றும்' நூல் கழக சார்பில் வழங்கப்பட்டது. மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி, அமைப்பாளர் குணாராஜ், தமிழ்முத்து, புதியவன் அசோக், மருத்துவர் முத்து உள்ளிட்ட கழகத் தோழர்களும், பெண்களும் பொது மக்களும் பங்கேற்றனர்.


# வெளி வந்துவிட்டது! 'நிமிர்வோம்' மார்ச் இதழ்

- சுயமரியாதை இயக்கத்தில் பெண்ணுரிமை – முனைவர் ஆனந்தி
- சங்க இலக்கியங்களில் வைதீக மறுப்பு – மயிலை பாலு
- பெரியாரின் விடுதலைப் பெண்ணியம்–பேரா. சுப்பரமணியம்
- ஈஷா மய்யத்தில் என்ன நடக்கிறது ?
- பெரியார் சந்தித்த அடக்குமுறை சட்டம் – வரலாற்றிலிருந்து அரிய தகவல்
- பறவைகள், விலங்குகள் மீது திணிக்கப்பட்ட ஜாதிய அடையாளங்கள். – ஏ. சண்முகானந்தம்
- பழனி பாரதி கவிதை
- தேசபக்தி எனும் ஆயுதம் – தலையங்கம்




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்... தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி, 'நிமிர்வோம்' மாத இதழ், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி எண் : 044 24980745 / 7299230363
www.dvkperiyar.com / nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th March 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN